
# 11 கண்ணகி வழக்குரைத்தல்

**காட்சி - 1**

**பாத்திரங்கள்: பாண்டிமாதேவி, தோழியர்**
**இடம்: பாண்டிமாதேவியின் அந்தப்புரம்**
**காலம்: முற்பகல்**

*(பாண்டிமாதேவி ஒரு பீடத்தில் அமர்ந்திருக்கின்றாள். தோழியர் அருகில் அமர்ந்துள்ளனர்)*



ஒரு தோழி:- தேவியாரே! மன்னிக்க வேண்டும். உங்கள் அழகிய முகம் என்றும்போல இல்லை இன்று. சிறிது வாட்டமுற்றிருக்கின்றது. பொலிவிழந்து காணப்படுகின்றது. காரணம் யாதோ? உடல் நலம் இன்மையால் அங்ஙனம் உள்ளதோ? தெரிவித்தால் உடனே ஆவன செய்யலாமே!

பாண்டிமா தேவி:- பாங்கி! நீ கூறுவது உண்மையே. ஆனால் உடலில் நோய் ஒன்றுமில்லை. மனந்தான் நலிவடைந்துள்ளது.

தோழி:- கோப்பெருந்தேவியீர்! வளம் கொழிக்கும் வையை நாட்டுக்கு இறைவியரே! மீனாட்சி சுந்தரர் அருளால் எல்லாச் செல்வங்களையும் பெற்று விளங்கும் உங்கள் மனம் நலிவடையக் காரணம் யாதோ? விருப்பமிருப்பின் அடியாள் மீது அன்பு கூர்ந்து அதனை வெளி யிடுங்கள். இன்றே - இல்லை - இப்போதே அதனை அகற்றற்குரிய முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

பா-தேவி:- உங்களுக்குத் தெரியாமல் மறைக்க வேண்டிய இரகசியம் ஒன்றுமில்லை. இன்று விடியற் காலையில் சில, தீக் கனவுகள் கண்டேன். கடைசிச் சாமத்திற்காணும் கனவு, உடனே பலிக்கும் என்று கனாநூல் வல்லார் கூறக் கேட்டுள்ளேன். அதனாற்றான் என் மனம் கவல்கின்றது.

தோழி:- பாண்டிமா தேவியீர்! நீங்கள் கூறுவது உண்மையே. ஆயினும், ஆண்டவன் அருள் பெற்றவர்களிடத்தில் 'நாள், கோள், வினைப் பயன் என்பன வலுவற்றுப் போகும்' என்ற ஆன்றோர் வாக்குக்கிணங்க, இத்தீக்கனவு யாது செய்ய வல்லது? அக்கனவு இன்னதென விவரிக்கலாமன்றோ?'

பா - தேவி:- பாங்கி, விவரிக்கலாம். அதை நினைக்குந் தோறும் மனம் வேதனையுறுகின்றது. விவரிக் கவும் வாய் நடுங்குகின்றது. ஆயினும்

கூறுவேன் கேள். நான் கண்ட கனவுகள் பல. ஒன்றில் செங்கோலும் வெண்குடையும் நிலத்து வீழ்ந்தன. அரண்மனை வாயில் ஆராய்ச்சி மணியின் குரல் நடுங்கியது. ஒரு கனவில் எட்டுத் திக்குகளும் அதிர்ந்தன. சூரியனை விழுங்கக் கூடிய இருள் உண்டாயிற்று. மற்றொரு கனவில் இரவில் இந்திரவில் இட்டிருந்தது. பகலில் விண்மீன்கள் விழுந்தன. ஆதலால் வருவதோர் உற்பாதம் உண்டு. இவற்றை மன்னருக்கு உரைப்போம் வருக.

*தோழி:-* அங்ஙனமே செய்வோம். ஆரடியங்கே? நம் கோப்பெருந்தேவியார் அரசர் அவைக்குச் செல்கின்றார். அதி விரைவில் அட்டமங்கலங்கள் ஏந்தி வாருங்கள்.

*ஏவல் மகளிர்:-* இதோ வந்துவிட்டோம் அம்மணி.

*(திரை விழுதல்)*

### காட்சி - 2

**பாத்திரங்கள்:- பாண்டியன் நெடுஞ்செழியன், கோப்பெருந்தேவி, கண்ணகி, மந்திரிகள், பிரதானிகள், வாயிற்காவலன், ஏவல் மகளிர் முதலியவர்**

**இடம்:- பாண்டியன் அவைக்களம்**
**காலம்:- முற்பகல்**

*(பாண்டியன் நெடுஞ்செழியன் அரியணையில் அமர்ந்திருக்கின்றான். பாண்டிமாதேவி சபையை நோக்கி வருகின்றாள். அவளை ஏவல் மகளிர் அட்டமங்கலங்களை ஏந்திக்கொண்டு சூழ்ந்து வருகின்றனர்)*

ஏவல் மகளிர்:- பாண்டியரின் பெருந்தேவி வாழ்க!
கோப்பெருந்தேவியார் வாழ்க!

(பாண்டிமாதேவி அரசர் அருகில் வந்து வணங்குகின்றாள்.)

நெடுஞ்செழியன்:- தேவி! மீனாட்சி சுந்தரர் அருளால் மங்களம் உண்டாகட்டும். (தன் அரியணையின் ஒரு புறத்தைச்சுட்டி) இங்கு அமர்க. திடீரென்று நம் அவையின் கண்வரக் காரணம் யாதோ? ஏன் உன் முகம் வாடியிருக்கின்றது? உடல் நலமின்றோ பிற காரணம் யாதேனுமுண்டோ?

கோப்பெருந்தேவி:- நாதரே! அடியாள் இன்று விடியற்காலையில் சில தீக்கனவுகள் கண்டேன். அது முதல் என் உள்ளம் நடுங்குகின்றது. நம் செங்கோலும், வெண்கொற்றக் குடையும் நிலத்தில் வீழ்ந்தன. அரண்மனை வாயிலில் ஆராய்ச்சி மணியின் குரல் நடுங்கியது.

நெடுஞ்செழியன்:- ஆ! என்ன செங்கோலும் குடையும் நிலத்தில் வீழ்ந்தனவா? அமைச்சர் பெருமக்களே, கேட்டீர்களா கோப்பெருந்தேவி கூறியதை!

(அத்தருணத்தில் அவைக்கு வெளியே நின்ற வாயில் காவலனைக் கண்ணகி அணுகி)

கண்ணகி:- வாயிலோயே! வாயிலோயே! அறநெறி மறந்த அரசனின் வாயிலோயே! 'கணவனை இழந்தாள் ஒருத்தி, கையிற் சிலம்பொன்று ஏந்தி வந்து வாசலில் காத்திருக்கின்றாள்' என்று நீதி கெட்ட நெடுஞ்செழியனுக்கு அறிவிப்பாயாக!

காவலன்:- (அரசனை அணுகி) அரசர் பெருமானே! வாயிலில் வந்திருக்கிறாள் ஒருத்தி. அவள் எருமைக்கடாவை வாகனமாகக் கொண்ட கொற்றவையும் அல்லள், பிடாரியும் அல்லள், பத்திரகாளியும் அல்லள், அவள் கண்கள் கோபக் கனலைக் கக்குகின்றன. கணவனை இழந்தவளாம். கையிற் சிலம்பொன்று ஏந்தியுள்ளாள்.

நெடுஞ்செழியன்:- அவள் வருக; அவளை விரைவில் உள் விடுக.

(கண்ணகி சபையில் வந்து மன்னன் முன் நிற்கின்றாள்)

நெடுஞ்செழியன்:- பெண்ணே, ஏன் கண்ணீர் சொரிகின்றனை? நீ யார்?

கண்ணகி:- நான் புகார் நகரில் வாழ்கிறேன். அவ்வூர்ப் பெருங்குடி வணிகர் மாசாத்துவன் என்பவரின் புதல்வி. கோவலருக்கு மனைவியான். அவர் ஊழ்வினையால் உமது நகரில் வந்து, என் காற்சிலம்பொன்றை விலைப்படுத்த விரும்பி, உம்மாற் கொலையுண்டார். என் பெயர் கண்ணகி.

நெடுஞ்செழியன்:- நன்று! கள்வனைக் கொல்லுதல் நீதி தானே?

கண்ணகி:- தீரக் கேட்டறியாமல் கொலைக் கட்டளையிட்டுக் கோவலரைக் கொன்றமையால், உமது நீதி முறைமை கெடுவதாயிற்று. அதனைக் காட்டுவேன். என் சிலம்பின் அரி மாணிக்கம்.

நெடுஞ்செழியன்:- என் தேவியுடைய சிலம்பின் பரல் முத்தே. (உடனே இரண்டு சிலம்புகளும் கொண்டு வந்து வைக்கப்படுகின்றன. கண்ணகி தன் காற்சிலம்பை எடுத்துத் தரையின் மீது வீசி எறிகிறாள். அது உடைகிறது. அதனுள் இருந்தவை அரிய மாணிக்கம் என்பதை அரசன் காண்கிறான்)

ஆ! என்னே! என் மதி! என்னே என் முறை! அந்தோ! பொற்கொல்லன் பொய்யுரை கேட்ட யானோ அரசன்! யானே கள்வன். என் அருமரபு என்னால் பழியுற்றதே! என் ஆயுள் கெடுவதாக!

(அரசன் அரியணையிற் சாய்ந்து மரண மடைகின்றான். அதைக் கண்ணுற்ற பாண்டிமா தேவி அவன் மீது வீழ்ந்து மரண மடைகின்றாள்)

(திரை விழுதல்)

◆ அரும்பதங்கள்

| | |
|---|---|
| பாங்கி | - தோழி |
| உற்பாதம் | - தீங்கு (தீமை) |
| பொற்கொல்லன் | - தங்க நகை செய்பவன் |
| கொற்றவை | - துர்க்கை |
| கனல் | - தீ |

### கிரகித்தல் பயிற்சி

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. இப்பாடத்தில் வரும் கதா பாத்திரங்களைத் தருக.
2. பாண்டிமாதேவி கண்ட கனவு யாது?
3. வாயிற்காவலன் கண்ணகி பற்றி அரசனிடம் கூறுவது யாது?
4. அரசனிடம் கண்ணகி தன்னை எவ்வாறு அறிமுகப்படுத்துகிறாள்?
5. இப்பாடத்தின் மூலம் நீர் பெற்றுக்கொள்ளும் படிப்பினை யாது?

### மொழித்திறன் விருத்திச் செயற்பாடுகள்

1. சிலப்பதிகாரம் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுக.
2. வகுப்பறையில் இந்நாடகத்தைப் பாத்திரமேற்று நடிக்க வழிகாட்டுக.
3. இந்நாடகத்தைச் சிறு கதையாகக் கூற வழிகாட்டுக.

## பந்தி அமைத்தல்

ஒருவர் தாம் கூற வந்த கருத்தைத் தெளிவாக எடுத்துரைப்பதற்கு பந்தியமைப்பு முக்கியமாகின்றது. கருத்தை ஒழுங்குபடுத்துவதற்கும் வாசிப்போர் மனதில் கருத்துக்கள் இலகுவில் பதியவும் பந்தி யமைப்பு அவசியமாகின்றது.

### பந்தி ஒன்றை அமைப்பதற்கான படிமுறை

★ குறித்த விடயம்பற்றிய குறிப்புக்களை வாக்கியங்களாக எழுதுதல்
★ வாக்கியங்களை ஒழுங்குபடுத்தல்
★ ஒழுங்கமைந்த முறைக்கேற்ப வாக்கியங்களை இணைத்தல்
★ வாசகர் மனத்தில் பதியும்படியான பந்தியை அமைத்தல்

## பந்தியின் பண்புகள்

- ★ தலைமைப் பொருளைக் கொண்டிருத்தல்
- ★ துணைக் கருத்துக்களைக் கொண்டிருத்தல்
- ★ கருத்துத் தொடர்பைக் கொண்டிருத்தல்

## பந்தி ஒன்றில் தவிர்க்கப்பட வேண்டியவை

- ★ கூறியது கூறல்
- ★ மிகைப்படக்கூறல்
- ★ முன்னுக்குப் பின் முரணாகக் கூறல்
- ★ சொல்ல வந்த பொருளைத் தவிர்த்து வேறு ஒரு பொருளைப் பற்றிக்கூறல்

**பயிற்சி**

(அ) பின்வரும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்தி ஒரு பந்தியாக எழுதுங்கள்:

1. ஒருவரது வாழ்வின் அரிய சாதனையை வெளிப்படுத்தும் பகுதிகளைக் கூறின.
2. பண்டைய காலத்தில் குறைந்த அடிகளையுடைய பல தனிப்பாடல்கள் புலவர்களால் பாடப்பட்டன.
3. சுவைமிக்க நிகழ்ச்சிகளை வருணித்தன.
4. இலக்கிய வளம் மிக்க மொழி.
5. அடிப்படைகளைத் தொகுத்து தொகை நூல்களாக பிற்காலப் புலவர்கள் அமைத்தனர்.
6. தமிழ்மொழி இனிய மொழி.
7. அவை உணர்ச்சிகளை வெளிப்படுத்தின.
8. அவையே எட்டுத்தொகை நூல்களாயின.

(ஆ) பின்வரும் தொனிப்பொருளில் பந்திகளை எழுதுக.

1. சூழல்
2. சூழலைப் பாதுகாத்தல்